**தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை**

**(நாரா நிறுவனம்)**

# பதவி வெற்றிடம்

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா நிறுவனம்) இலங்கையில் நீரியல் வள விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ வேலைகளை மேற்கொள்ளும் மற்றும் தொடர்பாடல்களை மேற்கொள்ளும் பொறுப்பு உடைய பிரதான தேசிய நிறுவனமாகும்.

**நாரா நிறுவனத்தில் வெற்றிடமாக உள்ள பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) பதவிகளுக்கு குறித்த தகைமைகள் மற்றும் அனுபவமுள்ள நபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.**

**இணைத்துகொள்வதற்கான தகைமைகள்**

**வெளி விண்ணப்பதாரர்களுக்கு**

கீழுள்ள 01 அல்லது 02

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயிரியல்/ கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவியல்/ மரபணுப் பொறியியல்/ விலங்கியல்/ தாவரவியல்/ மூலக்கூற்று உயிரியல்/ உயிர்ப் பொறியியல் தொழில்நுட்பவியல்/ பொருளியல்/ சமூக விஞ்ஞானம்/ சந்தைப்படுத்தல்/ புள்ளிவிபரவியல்/ இரசாயனவியல்/ உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்/ உயிர்இரசாயனவியல்/ கடல்சார் உயிரியல்/ உயிர்த் தொழில்நுட்பம்/ சமுத்திரவியல்/ புவிச்சரிதவியல்/ பௌதிகவியல்/ கனியவளத் தொழில்நுட்பம்/ கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானம்/ மீன்பிடித் தொழில்நுட்பம்/ சூழலியல்/ கைத்தொழில் மற்றும் சூழல்சார் இரசாயனவியல்/ சூழலியல் மற்றும் இயற்கை வள முகாமைத்துவம்/ நன்னீராய்வியல் மற்றும் நீர் வள முகாமைத்துவம்/ சூழல் மற்றும் வன வள முகாமைத்துவம்/ இயற்கை விஞ்ஞானம்/ அளவையியல் விஞ்ஞானம்/ விவசாய விஞ்ஞானம்/ நுண்ணுயிரியல்/ பூகோளவியல்/ மீன்வள உயிரியல் அல்லது பதவியுடன் தொடர்பான பாடத் துறையில் இளங்கலைப் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

மேற்படி பாடத் துறையில் அல்லது குறித்த துறைகளில் பட்டப்பின் படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

பட்டத் தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் அரச கூட்டுத்தாபனமொன்றில், நியதிகள் சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்திலான'' பதவிகளில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவம் (குறைந்தபட்சம் இதில் 05 வருடங்களாவது சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்)

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயிரியல்/ கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவியல்/ மரபணுப் பொறியியல்/ விலங்கியல்/ தாவரவியல்/ மூலக்கூற்று உயிரியல்/ உயிர்ப் பொறியியல் தொழில்நுட்பவியல்/ பொருளியல்/ சமூக விஞ்ஞானம்/ சந்தைப்படுத்தல்/ புள்ளிவிபரவியல்/ இரசாயனவியல்/ உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்/ உயிர்இரசாயனவியல்/ கடல்சார் உயிரியல்/ உயிர்த் தொழில்நுட்பம்/ சமுத்திரவியல்/ புவிச்சரிதவியல்/ பௌதிகவியல்/ கனியவளத் தொழில்நுட்பம்/ கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானம்/ மீன்பிடித் தொழில்நுட்பம்/ சூழலியல்/ கைத்தொழில் மற்றும் சூழல்சார் இரசாயனவியல்/ சூழலியல் மற்றும் இயற்கை வள முகாமைத்துவம்/ நன்னீராய்வியல் மற்றும் நீர் வள முகாமைத்துவம்/ சூழல் மற்றும் வன வள முகாமைத்துவம்/ இயற்கை விஞ்ஞானம்/ அளவையியல் விஞ்ஞானம்/ விவசாய விஞ்ஞானம்/ நுண்ணுயிரியல்/ பூகோளவியல்/ மீன்வள உயிரியல் அல்லது பதவியுடன் தொடர்பான பாடத் துறையில் இளங்கலைப் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

மேற்படி பாடத் துறைகளில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

கலாநிதிப் பட்டத்தை பெற்றுக்கொண்ட பின்னர் அரச கூட்டுத்தாபனமொன்றில், நியதிகள் சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் ''சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான'' குறைந்தபட்சம் (05) வருட நிறந்தர சேவை அறிக்கை உடைய அதிகாரியொருவராக அனுபவம் பெற்றிருத்தல்.

**சம்பளத் திட்டம்**

சேவைத் தரத்திற்குரிய சம்பளக் குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

**HM 2-1 – 1/2025: ரூ. 161,140- 12×4850 =219,340/-**

இதற்கு மேலதிகமாக வகுதிக்கு உரித்தாகும், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

(2027.01.01 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகளுக்கு சம்பளம் வழங்கப்படுவது முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 1/2025 இல் II அட்டவணையில் உள்ளவாறு மேற்கொள்ளப்படும்.)

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதிவுக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் நாட்டில் எந்த பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
iv. மேற்படி பதவிகளுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் மாதாந்த சம்பளத்தில் 10% ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதுடன், முகாமையினால் தமது வளங்களினால் சம்பளத்தில் 15% நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கப்படும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பாக 3% உடைய பங்களிப்புத் தொகையொன்று முகாமையின் மூலம் அந்த நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்படும்.

**விண்ணப்பிக்கும் ஒழுங்கு**

அனைத்து விண்ணப்பதாரர்களும் உறவினரல்லாத இரண்டு பரிந்துரை செய்பவர்களின் பெயர் மற்றும் முகவரிகளுடன் உங்களது முழுமையான சுயவிபரக் கோவை, ஆரம்ப கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றுடனும் 2026 ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு, மட்டக்குளி, கொழும்பு 15 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

நாரா நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட இணைத்துக்கொள்ளும் நடைமுறைக்கு அமைவாக தகைமைகள் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களை கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அந்த பரீட்சையில் காட்டும் திறமையின் அடிப்படையில் பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவர்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவது கீழ் குறிப்பிடப்பட்டவாறாகும்.

| | |
|---|---|
| குறித்த மேலதிக தகைமைகள் | - 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக கல்வி/ தொழிற் தகைமைகள் | - 30 புள்ளிகள் |
| குறித்த செயலாற்றுகைகள் மற்றும் திறமைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் செயலாற்றுகை | - 25 புள்ளிகள் |
| மொத்த புள்ளிகள் | - 100 |

அரசாங்க நியதிகள் சபை, கூட்டுத்தாபனம் அல்லது திணைக்களங்களில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை குறித்த நிறுவனத் தலைவர்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், நிறுவனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படாத, தாமதித்து கிடைக்கப்பெறும், முழுமையற்ற அல்லது தெளிவற்ற விண்ணப்பப்படிவங்கள் எந்த அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை,**
**காக்கை தீவு,**
**மட்டக்குளி, கொழும்பு – 15**
**011-2521000/ 2521006**
**(www.nara.ac.lk)**